

Image/ Manorama

# ‘கொலீஜியம்’
## நிர்வாக ஆதிக்கத்திலிருந்து நீதித்துறை சுயாட்சிக்கான பயணம்

*இந்திய அரசமைப்பின் முகவுரையை (Preamble), அதன் ஆன்மா என்று சொல்லலாம். அதில் “**நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம்**” என்னும் நான்கு அடிப்படை மதிப்பீடுகள் வலியுறுத்தப்படுகின்றன. மட்டுமல்ல, அதில் இந்தியா ஒரு **சுயாதீன, சமூகவாத, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது; அத்துடன் மக்களின் அதிகாரமே உச்சம் எனும் கொள்கையும் நிலைபெற்றுள்ளது.*

*இந்திய அரசமைப்பு **நெகிழ்வும் உறுதியும்** கலந்ததாக உள்ளது. சட்டத் திருத்தங்கள் (Amendments) மூலம், சமூக மாற்றங்களுக்கு ஏற்ப சட்டம் மாற்றம் அடைவதற்கான வழியும் வகுக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், அதன் அடிப்படைக் கொள்கைகளான **ஜனநாயகம், மதச்சார்பற்ற தன்மை, சட்டத்தின் ஆட்சி**- ஆகியவை எப்போதும் மாறாதவையாக பாதுகாக்கப் படுகின்றன.*

*இந்திய அரசமைப்பில், ‘நீதித்துறை சுயாட்சி’ (Judicial Autonomy), ஒரு அடிப்படை நெறிமுறையாகக் கருதப்படுகிறது. நீதிபதிகளை நியமிப்பது குறித்து அரசமைப்பில் தெளிவான வழிமுறைகள் இருந்தாலும், காலப்போக்கில் அதன் பொருள் மற்றும் நடைமுறைகள் பல்வேறு நீதித் தீர்ப்புகளால் மாற்றமடைந்தன. நிர்வாகத்தின் ஆதிக்கத்தில் இருந்த நீதிபதிகள் நியமனம், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிசெய்யும் கொலீஜியம் (Collegium) முறைக்கு மாறியது இந்திய நீதித்துறை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும்.*

*இந்தக் கட்டுரை, கொலீஜியம் அமைப்பு மற்றும் தேசிய நீதித்துறை நியமன ஆணையம் ஆகியவற்றின் செயல்பாடுகளையும், அவற்றின் நுணுக்கமான அணுகுமுறைகளையும் பற்றி விவரிப்பதோடு, அவற்றிற்கிடையேயான மோதல் போக்கையும் தொட்டுச்செல்கிறது.*


- **ர. கலைசெல்வி**
  *உதவி பேராசிரியர், சட்டப்பள்ளி*
  *வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை*

### நிர்வாக ஆதிக்கத்தின் காலம்

அரசமைப்பின் பிரிவு 124(2) மற்றும் பிரிவு 217(1) ஆகியவற்றின் அடிப்படையில், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் குடியரசுத் தலைவர் முக்கிய பங்கு வகித்தார். நியமனத்திற்கு முன் பிரதமர் மற்றும் சட்டத்துறை அமைச்சரின் பரிந்துரைகள் முக்கியமாகக் கருதப்பட்டன. இது "Executive Primacy" எனப்படும். அதாவது, நீதிபதிகளின் நியமனத்தில் நிர்வாகம் முன்னிலை வகித்தது. இந்த நிலைமை, 1970-களில் அரசியல் தலையீடுகளால் அதிகப்படுத்தப்பட்டு, நீதித் துறையின் சுயாதீனம் குறைந்ததாக விமர்சிக்கப் பட்டது.

கொலீஜியம் முறை (Collegium System) என்பது இந்தியாவில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிப்பதற்கும், மாற்றுவதற்கும் பின்பற்றப்பட்ட முறை ஆகும். சுருக்கமாக சொல்லப்போனால் "நீதிபதிகள் தாமே நீதிபதிகளை நியமிக்கும் முறையே" கொலீஜியம் ஆகும்.

இந்திய உச்சநீதிமன்றத்தில் அரசமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆகும். அரசமைப்பின் பிரிவு 124 -இன் படி உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்டது. துவக்கத்தில், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை மொத்தம் 8 ஆக (அதாவது தலைமை நீதிபதி + 7 பிற நீதிபதிகள்) அனுமதிக்கப்பட்டது. 1956 நீதிபதிகள் எண்ணிக்கை சட்டத்தின்படி, நீதிபதிகளின் எண்ணிக்கை, ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. தற்போது உச்ச நீதிமன்றம் 33 நீதிபதிகளுடன் (தலைமை நீதிபதி + 32 நீதிபதிகள்) இயங்குகிறது. இந்தியாவில் 25 உயர் நீதிமன்றங்கள் உள்ளன (இந்திய அரசமைப்பின் பிரிவு 214 இன் கீழ் நிறுவப்பட்டது).

அரசமைப்புச் சட்டத்தின்படி, கொலீஜியத்தின் பரிந்துரையின் பேரில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பிரிவு 124 இன் கீழ் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். அதேபோல் உயர் நீதிமன்ற நீதிபதிகள் இந்திய அரசமைப்பின் பிரிவு 217 இன் படி நியமிக்கப்படுகிறார்கள். இருப்பினும், கொலீஜியம் vs. தேசிய நீதித்துறை நியமன ஆணையம் (NJAC) இடையேயான வழக்கமான விவாதம் தொடர்கிறது. கொலீஜியம் முறையை பற்றி இந்திய அரசமைப்பில் நேரடி குறிப்புகள் எதுவுமில்லை; ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மூலம் அது உருவானது. இது தொடர்பான சில முக்கிய வழக்குகள் வருமாறு:

### முதல் நீதிபதிகள் வழக்கு

(First Judges Case, 1981)

S.P. Gupta vs Union of India (1981) என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம், நிர்வாகமே (Executive) நீதிபதிகளின் நியமனத்தில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெற்றது என்று தீர்மானித்தது. இதன் மூலம் நீதிபதிகளின் சுயாதீனம் குறைக்கப்பட்டதாக பலரும் கண்டனர். இந்த தீர்ப்பு "Executive Primacy" யை சட்டபூர்வமாக உறுதிப்படுத்தியது.

### இரண்டாம் நீதிபதிகள் வழக்கு

(Second Judges Case, 1993)

Supreme Court Advocates-on-Record Association vs Union of India (1993) வழக்கில், மேற்சொன்ன வழக்கின் தீர்ப்பு மாற்றப்பட்டது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம், நீதிபதிகள் நியமனத்தில் Chief Justice of India (CJI) மற்றும் மூத்த நீதிபதிகளின் ஆலோசனைக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என தீர்மானித்தது. இதுவே கொலீஜியம் முறைமை (Collegium System) உருவாகக் காரணமானது. இதன்மூலம் "Judicial Primacy" என்ற கொள்கை நிலைபெற்றது.

### மூன்றாம் நீதிபதிகள் வழக்கு

(Third Judges Case, 1998)

இந்த வழக்கில், கொலீஜியம் முறைமைக்கு விரிவான வடிவம் அளிக்கப்பட்டது. CJI உடன் நான்கு மூத்த நீதிபதிகள் இணைந்து ஆலோசனை செய்வதே சரியான நடைமுறை என தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம், நியமனமும், பதவி உயர்வும் முழுமையாக நீதித்துறையின் ஆலோசனையின் அடிப்படையிலேயே அமல்படுத்தப்பட்டன.

### நீதித்துறை சுயாதீனத்தின் மீட்டெடுப்பு

இந்த கொலீஜியம் முறைமை நீதித்துறையின் சுயாதீனத்தைக் காப்பாற்றுவதில் முக்கிய பங்காற்றியது. நிர்வாகம் அல்லது அரசியல் அழுத்தம் இன்றி நீதிபதிகளை நியமிப்பது, நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் கருவியாக கருதப்பட்டது. அதேவேளையில் இதில் வெளிப்படைத் தன்மை (Transparency) மற்றும் பொறுப்புணர்வு (Accountability) குறைவாக இருப்பதாக விமர்சனங்களும் எழுந்தன.

### தேசிய நீதித்துறை நியமன ஆணையம் (National Judicial Appointments Commission- NJAC)

NJAC அமைப்பு, இதற்கு முன்னால் நடைமுறையில் இருந்த கொலீஜியம் (Collegium) முறைமையை மாற்றும் வகையிலும், நீதிபதிகளை நியமிக்கும் முறைமையை சீரமைக்கும் நோக்கிலும் 2014 ஆம் ஆண்டு 99-ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம், மூலம் கொண்டு வரப்பட்டது. இதன் அடிப்படையில், அரசமைப்பில் பின்வரும் புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டன:

- பிரிவு 124A- NJAC யின் அமைப்பு
- பிரிவு 124B- NJAC யின் பணிகள்
- பிரிவு 124C- NJAC யின் செயல்முறைகளை வகுப்பதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம்.

**NJAC- யின் அமைப்பு** (Article 124A)

NJAC மொத்தம் ஆறு உறுப்பினர்களைக் கொண்டது:

- இந்திய தலைமை நீதிபதி (Chief Justice of India)- தலைவர்
- உச்சநீதிமன்றத்தின் இரு மூத்த நீதிபதிகள்
- சட்டம் மற்றும் நீதித்துறை மத்திய அமைச்சர்
- துறை சார்ந்த திறன் மற்றும் புகழ்பெற்ற இரண்டு நபர்கள் (Eminent Persons)

(இரண்டு புகழ்பெற்ற நபர்களைத் தேர்வு செய்வது என்பது, தலைமை நீதிபதி + பிரதமர் + எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அடங்கிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்).

**NJAC யின் பணிகள்** (Article 124B)

- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கான பரிந்துரை வழங்குதல்
- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மற்றும் நீதிபதிகளை மாற்றி நியமிப்பதற்கான பரிந்துரை
- நியமிக்கப்படுவோர் தகுதி, நேர்மை, திறமை ஆகியவற்றை உறுதி செய்தல்
- நியமனத்திற்கான நடைமுறை, ஆலோசனை மற்றும் பரிந்துரைகள் குறித்து விதிமுறைகள் வகுத்தல் ஆகியவை இம்முறையின் பணிகளாக இருந்தன. மேலும், இரு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால், எந்த நியமனமும் நிறைவேறாது என்பதையும் சட்டம் நிர்ணயித்தது.

இருப்பினும் இம்முறை, 2015 ஆம் ஆண்டே உச்சநீதிமன்றத்தால் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானதாக அறிவிக்கப்பட்டது.

Supreme Court Advocates-on-Record Association v. Union of India (2015) வழக்கில், ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு 4:1 என்ற பெரும்பான்மையால், NJAC சட்டத்தையும், 99-ஆவது அரசமைப்பு சட்டத் திருத்தத்தையும் அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளித்தது.

நீதித்துறை சுயாட்சி என்பது அரசமைப்பின் அடிப்படை அமைப்பு. NJAC யின் ஆதிக்கத்தால் அந்த சுயாட்சிபாதிக்கப்படுகிறது என்று உச்ச நீதிமன்றம் குறிப் பிட்டது. எனினும், கொலீஜியம் முறையிலும் சீர்திருத்தம் அவசியம் என்பதை நீதிமன்றம் ஒப்புக் கொண்டது.

தேசிய நீதித்துறை நியமன ஆணையம் என்பது நீதிபதி நியமனத்தில் சீர்திருத்தம் கொண்டு வர முயன்ற ஒரு முக்கிய முயற்சி. ஆனால் இந்த அமைப்பால், நீதித்துறை சுயாட்சிக்கும், நிர்வாக பங்கிற்கும் இடையில் சரியான சம நிலையை ஏற்படுத்த முடியவில்லை.

### கொலீஜியம் முறைமையின் வலிமைகளும் - குறைகளும்

- நீதித்துறை சுயாதீனம் என்பது கொலீஜியம் முறைமையின் மிகப் பெரிய ஆற்றல் சக்தியாகவும், வலிமையாகவும் கருதப்படுகிறது.
- கொலீஜியத்தின் ஆலோசனைகள் பொதுவாகத் தடுக்கப்பட்டு, வெளிப்படையாக விளக்கப்படுவதில்லை என்பதாலும், தேர்வுக்கான தக்க காரணங்கள் பொதுமக்களுக்கு தெரிவதில்லை என்பதாலும், வெளிப்படைத் தன்மை பற்றாக்குறை (Transparency deficit) என்பது இம்முறையின் குறையாக உள்ளதாக நம்பப்படுகிறது.
- பெரும்பான்மையான விமர்சகர்கள், கொலீஜியத்தின் தீர்மானம் “நேர்மையான கணக்கீட்டிற்குப் பலவீனம் அடைந்தது” எனவும், நியமன ஒழுக்கம் இல்லை (Nepotism / Lack of accountability) என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.
- மத்திய அரசுக்கு முறையான பங்கின்மை (Executive sidelining) என்பது விவாதகரமானதாக உள்ளது. நிர்வாகத்திற்கும் ஒரு சரியான balance தேவை என்னும் வாதமும் எழுகின்றது.

### தற்போதைய கொலீஜியம்

தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி சூர்யா காந்த், நீதிபதி விக்ரம் நாத், நீதிபதி ஜே.கே. மகேஸ்வரி மற்றும் நீதிபதி பி.வி. நாகரத்னா. (நீதிபதி அபய் ஒகா ஓய்வு பெற்ற பிறகு, நீதிபதி நாகரத்னா அதிகாரப்பூர்வமாக கொலீஜியத்தில் இணைந்துள்ளார்). 2027-இல் இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதியாக நீதிபதி நாகரத்னா பதவியேற்க உள்ளதால் இது ஒரு குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத் தன்மையை குறிக்கிறது.

## கொலீஜியம் அமைப்பின் தற்போதைய சவால்கள்

கொலீஜியம் அமைப்பை விமர்சிப்பவர்கள், பொதுவாகக் கூறும் ஒரு சட்டக் கூற்று என்னவென்றால், "எந்தவொரு மனிதனும் தனது சொந்த வழக்கில் தானே நீதிபதியாக இருக்கக் கூடாது" (nemo judex in causa sua), என்பதாகும்.

கொலீஜியம் அமைப்பில் பிணைப்பு விதிகள் இல்லாமை, அரசின் குறுக்கீடு, ஒளிபுகாத் தன்மை, ஆலோசனையைச் சார்ந்திருத்தல் மற்றும் தொடர்ச்சியான

AD

நீதித்துறை-நிர்வாக மோதல் போன்ற சிக்கல்கள் உள்ளன.

- **பிணைப்பு விதிகள் இல்லாமை (Lack of Binding Rules):** கொலீஜியம் முறையான பிணைப்பு விதிகள் இல்லாமல் செயல்படுகிறது. எனவே தற்காலிக முடிவெடுப்பதில் சிக்கல் மற்றும் நடைமுறை முரண்பாடுகள் இருப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது.
- **அரசுத் தடை:** கொலீஜியம் பரிந்துரைகளை தாமதப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ மத்திய அரசுக்கு திறன் இருப்பதால், இதன் முழு செயல்முறை குறைக்கப்படுகிறது.
- **ஒளிபுகா தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் இல்லாமை:** கொலீஜிய முடிவுகள் தெளிவற்றவையாகவும் அதன் அளவுகோல்கள் மற்றும்செயல் முறைகளில் குறைவாக இருப்ப தாகவும் விளம்பரப்படுத்தப்படுகின்றன.
- **நீதித்துறைக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான பதட்டங்கள்:** நீதிபதிகள் நியமனங்களில் நீதித்துறையின் முதன்மைத்துவம் தொடர்பாக அரசுக்கும் நீதித்துறைக்கும்(executive&Judiciary) இடையிலான மோதல்கள், அதிகார சமநிலையில், நீண்ட காலமாக ஏற்படும் இடையூறுகளாக நிரூபிக்கப்பட்டுள்ளன.
- கொலீஜியத்தின் பரிந்துரைகள் பெரும்பாலும் நிலுவையில் வைக்கப்படுகின்றன, மேலும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை நிறுத்தி வைப்பதன் மூலம் மறுபரிசீலனை கள் நிறுத்தப்படுகின்றன.

இன்றைய நிலையில், கொலீஜியம் முறைமை திறந்த செயல்முறை, காரண விளக்கம், மற்றும் பொது நம்பிக்கை ஆகியவற்றில் சவால்களை எதிர்கொள்கிறது. பலர், ஒரு சமநிலை முறைமை தேவை என வலியுறுத்துகின்றனர்.

இந்த விமர்சனங்கள் அனைத்திற்கும் எதிராக, கொலீஜியம் அமைப்பு அதிகாரப் பிரிவினை விதியையும் நீதித்துறையின் சுதந்திரத்தையும் தாங்கி பராமரிக்கிறது என்பதுதான் உண்மை. அதற்கு அதன் சொந்த முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மை தேவைப் படலாம். ஆனால் அது, இந்த நியமன முறையை முற்றிலுமாக புறக்கணிக்கத் தேவையில்லை.

நடைமுறையில், தலைமை நீதிபதியின் கருத்து, உச்ச நீதிமன்ற மட்டத்தில் உள்ள மக்களின் கூட்டுக் கருத்தாகும். வேட்பாளர்களை அறிந்து ஆய்வு செய்வதும், கொலீஜியத்தின் விரிவான ஆய்வின் மூலம் ஆதரிக்கப் படுவதும் தலைமை நீதிபதிக்கு தீர்க்கமான தலைமை வழங்கப்படுகிறது. குறைபாடுகளைத் தீர்ப்பதிலும், இடைவெளிகளை நிரப்புவதிலும், அதன் செயல்திறனின் ஒவ்வொரு அங்குலத்திலும் பணியாற்றுவதிலும், திறமையாக செயல்படுவதற்கான புறநிலை அளவுகோல்களை ஏற்றுக் கொள்வதிலும் உண்மையான தீர்வு உள்ளது.

கொலீஜியம் அமைப்பு நாட்டில் நீதித்துறையை வலுவாகவும், சுதந்திரமாகவும், நிர்வாக அல்லது நாடாளுமன்ற தலையீட்டிலிருந்து விடுபடவும் உதவியுள்ளதாக இந்திய தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்

நீதிபதிகளின் கொலீஜியம் முறைமை, இந்திய அரசமைப்பின் சுயாதீன நீதித்துறைக்கான அடித்தளமாக மாறியுள்ளது. நிர்வாக ஆதிக்கத்திலிருந்து நீதித்துறை சுயாட்சிக்கான பயணம், இந்திய ஜனநாயகத்தின் வளர்ச்சியையும், நீதித்துறையின் ஆளுமையையும் பிரதிபலிக்கிறது. ■